புலவரக வெளியீடு: 14

முதற் பதிப்பு: 1966

ஸ்ரீ சண்முகநாத அச்சகம்

யாழ்ப்பாணம்



# முகவுரை

மயிலணி அந்தாதி என்னும் இந்நூல் யாழ்ப்பாணத்துச் சுன்னுகத்தின் வடபாலுள்ள மயிலணி என வழங்கும் திவ்விய தலத்திற் கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் முருகக் கடவுள்மீது அந்தாதித் தொடையமையக் கட்டளைக் கலித்துறை யாப்பினுல் எம்மால் இயற்றப் பெற்றுள்ளது. மயிலணி, மடங்களுக்கும், ஆலயங்களுக்கும், பள்ளிக் கூடங்களுக்கும் உறைவிடமாக விளங்கிய ஓர் பழமை வாய்ந்த இடமாகும்.

அந்தாதி என்னும் நூல் தொண்ணூற்றுறு வகைப் பிரபந்தங்களிலொன்று. அது சிறு காப்பிய வகையைச் சார்ந்தது. அந்தாதியாவது ஒரு செய்யுளின் ஈற்றிலுள்ள எழுத்தாவது, அசையாவது, சீராவது, அடியாவது, அடுத்த செய்யுளின் முதலில் வரப் பாடப்படுவது. ஈற்றுச் செய்யுளின் அந்தமே முதற் செய்யுளின் முதலாகவும் அமைதல் வேண்டும். 'அந்தமுதலாத் தொடுப்பதந்தாதி' என்பது யாப்பருங்கலக்காரிகை ஆசிரியர் கூற்று.

இந்நூலைப் படிப்பவர்களுக்கு உபயோகமாருமாறு செய்யுட்களில் வரும் அருஞ் சொற்களுக்குப் பொருள் கூறப்பட்டுள்ளது.

இந்நூலைப் பார்வையிட்டுத் திருத்தங்கள் செய்துதவிய எமது நண்பரும் நுண்மாணுழைபுலமிக்க பண்டிதருமாகிய திரு. சி. கதிரிப்பிள்ளை அவர்களுக்கு எமது அன்பும் நன்றியும் உரியதாகுக.

சுன்னுகம்
1-6-66

கு. முத்துக்குமாரசுவாமிப்பிள்ளை

சேவற் பெருங்கொடி யுஞ்சிகி ஊர்தியுஞ் செவ்வயிலுந்
தேவப் பெதும்பையுஞ் சேல்விழி வள்ளியுஞ் சேர்ந்துனக்கு
ஏவல் பெரிதயர் ஏரினைக் காணுற எந்தனுக்கு
ஆவல் பெரிதுண்டு சுன்னையில் வாழும் அறுமுகனே! 99.

கரங்கள் எடுத்துக் குவித்து வணங்கிக் கணப்பொழுதிற்
புரங்கள் எரித்த புராந்தகன் பெற்ற புலவனையே
மரங்கள் எழில்செய் மயிலணிப் பேருடை மாதலத்தில்
வரங்கள் எமையடை யும்வகை வேண்டுவன் வாழ்க்கையிலே.

முற்றும்

---

1. சிகி - மயில். ஊர்தி – வாகனம்.
2. பெதும்பை - இளம்பெண். 3. அயர் - செய்தல்.

# இந்நூலாசிரியர் இயற்றிய நூல்கள்

## காசியாற்றுப்படை

''1957-ம் ஆண்டு காசி யாத்திரை செய்து வந்த இந்நூலாசிரியர் தாம் கண்ட காட்சிகளையும், தரிசித்துவந்த தலங்களையும், பெற்ற அநுபவங்களையுந் திரட்டிக் காசி யாற்றுப்படை நூலாக இயற்றியிருக்கின்றார்கள். இந் நூலகத்தே தொன்மைக்கால வரலாறும் பிறவும் பின்னிப் பிணிக்கப்பட்டிருக்கும் வனப்பு இக்காலப் பிற நூல்களுட் காணப்படாததொன்று. (வானொலி) **விலை சதம் 35.**

## மயிலணி முருகவேள் மும்மணிக்கோவை

இது சுன்னாகம் மயிலணி என்னுந் தலத்திற் கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் முருகக் கடவுளின்மீது பாடப்பட்ட சிறந்த நூலாகும். பாக்கள் பக்திச் சுவையோடு கூடிப் படிப்பவர்களுக்கு இன்பம் பயக்க வல்லன.

**விலை சதம் 25.**

## சந்திரசேகரப் பிள்ளையார் இரட்டை மணிமாலை

இது சுன்னாகம் சந்திரசேகரப்பிள்ளையார் மீது பாடப்பட்ட ஒரு செய்யுள் நூல். **விலை சதம் 15.**

## சிவசம்புப்புலவர் சரித்திரம்

இது உடுப்பிட்டி வாசியாகிய சிவசம்புப் புலவர் சரித்திரத்தைக் கூறுவது. **விலை சதம் 30.**

## மயிலணி அந்தாதி **விலை சதம் 50.**

## கந்தையபிள்ளை நினைவுப் பாமாலை **விலை சதம் 10.**

# இந்நூலாசிரியர் பதிப்பித்தன

## தமிழ்ப்புலவர் சரித்திரம் (இரண்டாம் பதிப்பு)

இது சுன்னாகம் குமாரசுவாமிப் புலவர் இயற்றியது. இதன்கண் தமிழ் மொழிக்கணுள்ள இலக்கியவிலக்கணங்களைக் கலக்கமறக் கற்றுணர்ந்த மெய்யுணர்வும் பிரபந்தஞ் செய்யும் பெருவலியுமுடைய இருநூற்றுக்கு மேற்பட்ட புல

